www.padippakam.com


# புதிய பார்வை

பார்வை — 13 ஆனி—1992


## உள்ளூராட்சித் தேர்தல் வைத்து உறுப்பினர்களுடன் பேசப்போகிறாராம் ஜனாதிபதி

# என்ன பேசப்போகிறார்?

**விரைவில் உள்ளூர் ஆட்சித் தேர்தலை நடாத்தி பிரதிநிதிகளை தெரிவுசெய்து அவர்களுடன் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக ஜனாதிபதி பிரேமதாசா அண்மையில் வவுனியாவுக்கு விஜயம் செய்த போது தெரிவித்துள்ளார். பிரேமதாசா இனப்பிரச்சனைக்காக ஆடிவரும் இழுத்தடிப்பு நாடகத்தில் புதியகாட்சி இது.**

இனப்பிரச்சனையைத்தீர்க்க வேண்டுமென்பதை விட இனப்பிரச்சனை தொடரவேண்டும் என்பதிலேயே பிரேமதாசா அதிகஅக்கறை கொண்டுள்ளார். இதனை அவரது கடந்தகால நடவடிக்கைகள் எமக்கு இனம்காட்டி நிற்கின்றன. இலங்கை இந்திய ஒப்பந்தத்தைத் தட்டிக் கழித்துவிட்ட பிரேமதாசா சர்வகட்சி மாநாடு, பாராளுமன்றத் தெரிவுக்குழு, தொண்டமான் பேச்சுவார்த்தை, கத்தோலிக்க குருமார் பேச்சுவார்த்தை, பௌத்த குருமார் பேச்சுவார்த்தை என வேடம்போட்டுவந்த பிரேமதாசா இவற்றினை வெறும் இழுத்தடிப்புகளாக மேற்கொண்டுவிட்டு இப்போது உள்ளூராட்சி உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை என்ற புதிய அத்தியாயத்துடன் இனப்பிரச்சனையுடன் உலா வருகிறார்.

பிரேமதாசா ஆட்சிப்பொறுப்பேற்றகாலத்திலிருந்து இனப்பிரச்சனைதொடர்பான தீர்வுக்கான எந்தவித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை. இலங்கையில் அனைத்து மக்களும் சுதந்திரமாக வாழவேண்டுமென்றுநீலிக் கண்ணீர் வடிக்கும் பிரேமதாசாவோ அன்றி ஐ.தே.கட்சியோ இனப்பிரச்சனைக்கு என்ன தீர்வை முன்வைத்துள்ளனர். அல்லது இனப்பிரச்சனை தொடர்பாக இவர்கள் மேற்கொண்ட முன்னேற்றகரமான நடவடிக்கைகள் என்ன?

இது தொடர்பாக ஐ. தே. கட்சியிலுள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மந்திரிகள் மௌனம் சாதிப்பதேன்? பேசுவோம் பேசுவோம் என்று காலத்தைக் கடத்திவரும் பிரேமதாசா உள்ளூராட்சி உறுப்பினர்களுடன் மட்டும் என்ன பேசப் போகிறார்?

### தமிழ்,முஸ்லீம் கட்சிகளுடன் சந்திப்பு

பிரேமதாசாவைச் சந்தித்த ஏழு தமிழ் கட்சிகளும் முஸ்லீம் காங்கிரசும் நாலம்சக்கோரிக்கை ஒன்றை முன்வைத்து இனப்பிரச்சனைக்கான தீர்வுபற்றி வற்புறுத்தி உள்ளன. பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முடிவை தான் நடைமுறைப் படுத்தப் போவதாக பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகிய பிரதான கட்சிகள் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு இனப்பிரச்சனை தொடர்பாக எதுவித யோசனையையும் தெரிவிக்கவில்லை என தமிழ்கட்சிகள் பிரேமதாசாவிடம் சுட்டிக்காட்டியுள்ளன. ஜனாதிபதியுடனான சந்திப்பு திருப்தியளிக்கவில்லையென 15.6.92. ல் பிரேமதாசாவைச் சந்தித்த தமிழ்கட்சிகள் தெரிவித்துள்ளதாக தெரிய வருகிறது.

வவுனியாவில் பேசும்போது உள்ளூராட்சிச்சபை பிரதிநிதிகளுடன் பேசப்போகிறேன் எனக்கூறிவிட்டுவந்த பிரேமதாசா கொழும்

(இரண்டாம் பக்கம் பார்க்க......



வித்தைக்காரர்

## சுழல்காற்று இராணுவநடவடிக்கையில்

## வடக்கில் பலத்தசேதம்

27.05.92 முதல் வடக்கின் பலபகுதிகளில் திடீரென ஆரம்பிக்கப்பட்ட 'சுழல்காற்று' எனஅழைக்கப்பட்டு வடக்கில் மேற்கொள்ளப்பட்ட திடீர் இராணுவநடவடிக்கை பலத்த சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. பல்லாயிரக்கணக்கானோர் அகதிகளாகியுள்ளனர்.

தொண்டமானாற்றில் 12 சதுரமைல் தூரம் இராணுவக்கட்டுப்பாட்டுள் வந்துள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் அளம்பில் பகுதி முற்றான இராணுவக்கட்டுப்பாட்டில் வந்துள்ளது. வல்வெட்டித்துறை, பொலிகண்டி, உடுப்பிட்டிப் பகுதிகளில் இராணுவத்தாக்குதலின் போது 12பேர் கொல்லப்பட்டும், 3000பேர் அகதிகளாயும் உள்ளனர்.

விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலால் யாழ்/மனோகராதியேட்டர், இணுவில் வைத்தியசாலை, சுன்னாகம் சந்தை, தெல்லிப்பழை கூட்டுறவுச்சங்கக் கட்டிடம் ஆகியன முற்றாகச் சேதமடைந்தன. தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய கோபுரத்தின் பெரும்பகுதி சேதத்துக்குள்ளானது. தெல்லிப்பழையும் அதனைச்சுற்றிய பகுதிகளும் இராணுவத்தினரின், கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின் றன.

இந்த இராணுவ நடவடிக்கைகளின்போது தெல்லிப்பழையைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து 1000 குடும்பங்களும், அச்சுவேலியிலும் அதனைச்சுற்றியுள்ள பகுதிகளிலுமிருந்து 1200 குடும்பங்களுமாக சுமார் 20,000 பேர் அகதிமுகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

## புலிகளின் சிற்றூரவை,

## அரசியல்பிரிவு கலைப்பு

புலிகளின் சிற்றூரவை, அரசியல் பிரிவு ஆகியன பிரபாகரனால் முற்றாகக்கலைக்கப்பட்டு, முற்றுமுழுதான இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளது. புலிகள் சந்தித்து வரும் தோல்விகளினால் சிற்றூரவைகளின் உறுப்பினனர்கள் மெல்ல மெல்ல விலகிவருவதனால், முற்றுமுழுதாக அனைவரும் விலகுமுன்பு முந்திக் கொண்ட புலிகள் தாம் சிற்றூரவைகளை கலைத்துவிட்டதாக அறிவித்து ள்ளனர்.

இதனை தொடர்ந்து அரசியல் பிரிவையும் கலைத்துள்ளதாக தெரியவருகிறது. புலிகளின் பிரதித்தலைவர் மாத்தையா, பிரதித்தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு வவுனியா இராணுவப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரின் பிரதித்தலைவர் பதவிக்கு பிரபாகரனின் நம்பிக்கைக்குரியவரான பேபி சுப்ரமணியம் நியமிக்கப்பட்டுள்ளார். பேபிசுப்ரமணியம் ராஜீவ்காந்தி படுகொலை, பத்மநாபா படுகொலை தொடர்பாக தேடப்பட்டுவரும் நபராவார். அரசியல்பிரிவுச் செயலாளர் யோகி, அரசியல் பிரிவு கலைக்கப்பட்டுள்ளதால் பதவி இழந்தார்.

**எமது மக்களுக்கு அமைதி, சமாதானம், சமத்துவம், ஜனநாயகம் கிடைக்கும்வரை நாம் இறுதிவரை உறுதியுடன் போராடுவோம்**

படிப்பகம்

## எமது பார்வையில்

தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற பாசிசக் குழுவுக்கு எதிரான தடையை இந்திய அரசு அறிவித்துவிட்டது. புலிகள் இந்தியமண்ணில் நடத்திவந்த பல்வேறு பயங்கரவாத... சமூகவிரோத நடவடிக்கைகளும் அவற்றின் உச்சக்கட்டமான எமது செயலாளர் நாயகம் தோழர். பத்மநாபா மற்றும் முன்னணித்தோழர்கள் படுகொலை, முன்னாள்பிரதமர் ராஜீவ் படுகொலை ஆகியவற்றுக்கு கிடைத்துள்ள தண்டனை இது.

புலிகள் தொடர்பான பார்வையில் இந்தியஅரசு இறுதியாக எடுத்திருக்கும் இந்த உறுதியான முடிவை நாம் வரவேற்கிறோம். பல்வேறுபட்ட சர்வதேசமோசடிகள் மூலம் பெறப்பட்ட பெருந்தொகை பணத்தினால் ஈழமக்களின் பிரச்சனைகளில் எதுவித அக்கறையுமில்லாமல் வெறுமனே பணத்துக்காக கூச்சல்போடும் சில தமிழக அரசியல்வாதிகளை விலைக்குவாங்கி ஆடிவந்த ஆட்டங்கள் முடிவுக்கு வந்திருக்கின்றன.

எமது மக்கள் குறித்தோ அல்லது அவர்கள் படும் துன்பங்கள் குறித்தோ எந்தவித அக்கறையுமில்லாமல் புலிகள்... எதிர்காலம் குறித்த எந்த சிந்தனையுமில்லாத புலிகளின் குருட்டுத்தனம்.. புலிகளின் சுவாசத்திலேயே கலந்துவிட்ட கொலைவெறி...மீளமுடியாத அதிகாரவெறிகொண்டுவிட்ட புலிகளின்தலைமை இவையே இன்றைய தடையின் அடிப்படைக்காரணங்கள்.

புலிகள் மீது இந்தியா விதித்திருக்கும் இந்தத்தடையால் அவர்களது அரசியல் அஸ்தமனம் ஆரம்பமாகிவிட்டது. அரசியல் சதுரங்க விளையாட்டுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய நாள்வந்து விட்டது. புதிய உலகில் இந்தியா போன்ற வலிமைமிக்க அயல்நாடொன்றை எதிரியாக்கியதன் மூலம் புலிகளின் அரசியல் சூனியம் அம்பலத்துக்கு வந்துவிட்டது.

வழமைபோலவே தமது மரபு மாறாமலே தமக்கெதிரான தடையை இந்தியா அறிவித்தவுடன் 'இந்தியா எமக்கு பயிற்சி தந்தது... இப்போது இந்தியாவே தடைசெய்துவிட்டது. இந்தியா சந்தர்ப்பவாதி துரோகி என்றெல்லாம் புலிகளின் குரல்கள் குமுறத் தொடங்கிவிட்டன.

இதிலே கவனிக்கவேண்டியது என்னவென்றால் கடந்த காலங்களில் இதே புலிகளின் குரல்கள் எம்மைத் தவிர மற்றைய இயக்கங்களுக்கு இந்தியா பயிற்சி அளித்தது..ஆயுதம் கொடுத்தது. எம்மை மாத்திரம் இந்தியாவால் விலைக்கு வாங்கமுடியவில்லை என வீரவசனம் பேசியதுதான்.
அது மாத்திரமல்ல தடைபற்றிய பேச்சு ஆரம்பமாகியவுடனேயே 'புலிகள் தொடர்பான தனது அணுகுமுறைகளை இந்தியா மாற்றிக்கொள்ளவேண்டும். இந்தியாவுடன் உறவுகளை புதுப்பிக்க நாம் கதவுகளை திறந்தே வைத்திருக்கிறோம்.' எனக் கெஞ்சிய புலிகள்.இப்போது வசனங்களை மாற்ற ஆரம்பித்துவிட்டனர்.

இந்தியாவைத் தொடர்ந்து இன்று நோர்வேயிலும், ஜேர்மனியிலும், அவுஸ்திரேலியாவிலும், சுவிசிலும், இத்தாலியிலும் , கனடாவிலும் புலிகளுக்கு ஏற்பட்டுவருகிற நெருக்கடி விரைவில் அவர்களை சர்வதேசபயங்கரவாத அமைப்புகளில் ஒன்றாக கொண்டு வந்துவிடும்.

அதேசமயம் புலிகளை தடைசெய்ததுடன் மாத்திரம் இந்திய அரசின் கடமை முடிந்து விடவில்லை. ஸ்ரீ லங்கா இனவாத அரசிடமிருந்து தமது உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ள அனைத்தையும் இழந்து அகதிகளாக இந்தியா சென்று அங்கு எண்ணற்ற துன்பங்களுக்கிடையே வாழும் இரண்டரை இலட்சத்துக்கும் மேலான ஈழஅகதிகளின் பாதுகாப்பு இந்திய அரசின் பொறுப்பாகும்.

புலிகள்மீது கொண்டுள்ள வெறுப்பு ஈழஅகதிகள்மீது பாய இந்திய அரசு அனுமதிக்கக் கூடாது. புலிகளையும் அகதிகளையும் வேறுபடுத்திப் பார்க்கவேண்டும். புலிகள் மீது கொண்ட ஆத்திரத்தால் அவசரப்பட்டு அப்பாவி அகதிகளை நாடுகடத்துவதென்பது அவர்களை ஸ்ரீ லங்கா அரசின் கொலைக்கரங்களில் ஒப்படைப்பதாகும்.

இந்திய அரசினால் மீள அனுப்பப்பட்ட அகதிகளுக்கு இலங்கை மண்ணில் இன்று பல கொடுமைகள் நடக்கின்றன. அவர்களுக்கு இந்திய ஸ்ரீ லங்கா அரசுகள் வழங்கிய வாக்குறுதிகள் எதுவுமே நிறைவேற்றப்படவில்லை. மாறாக உயிராபத்து சூழ்ந்துள்ள இடங்களில் அவர்கள் கிட்டத்தட்ட பணயக் கைதிகள் போல வைக்கப்பட்டுள்ளார்கள். அத்துடன் படையினராலும் சிங்களக் குண்டர்களாலும் அவர்கள் பல துன்பங்களை எதிர்கொள்கிறார்கள்.

இந்தச் சம்பவங்களையும், திருப்பி அனுப்பப்பட்ட சிலஅகதி இளைஞர்கள் அரசபடையினரால் கைது செய்யப்பட்டதையும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அம்பலப்படுத்தியுள்ளனர்.

இந்த விடயங்களை இந்திய அரசு கவனத்தில் எடுக்கவேண்டும். புலிகள்வேறு அப்பாவி அகதிகள் வேறு என்பதை புரிந்து கொள்ளவேண்டும். அகதிகளை மீள அனுப்பும் செயலை உடனடியாக நிறுத்த வேண்டும். மறுபரிசீலனை செய்ய வேண்டும். இலங்கையில் அமைதி ஏற்படும்வரை எந்த அகதியின் உயிருக்கும் உத்தரவாதமில்லையென்ற உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.
இனப்பிரச்சனைக்கான தீர்வொன்று காணவேண்டிய அவசியத்தை ஸ்ரீ லங்கா அரசுக்கு அரசியல் அழுக்கங்கள் மூலம் உணர்த்த வேண்டும். அரசுக்கு மாத்திரமல்ல இனப்பிரச்சனையில் இரட்டைவேடம் போடமுயலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி போன்ற கட்சிகளுக்கும் நட்பின் அடிப்படையில் சுமுகமான தீர்வொன்றைக்காண வற்புறுத்த வேண்டும்.

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி......)

### அவுஸ்திரேலியாவில் கள்ள காசோலைகள்

புலிகள் தங்கள் தேவைகளுக்குவேண்டி அவுஸ்திரேலியாவில் இலட்சக்கணக்கான டொலர்கள் கள்ளகாசோலைகள் பாவித்து மோசடிசெய்துள்ளதாக அவுஸ்திரேலிய பொலிசார் தெரிவித்துள்ளனர். புலிகளால் கள்ளக்காசோலைகள் மோசடிசெய்யப்படுவதாக தெரிந்துகொண்ட, 50பேர்கொண்ட பொலிசாரின்குழுஒன்று புலிகள் தங்கியிருந்த வீடொன்றை சோதனையிட்டதில் இவையாவும் அம்பலமாகின. இதில் தொடர்புள்ள மூன்று புலிஉறுப்பினர்கள் ஜேர்மனியிலுள்ள பிராங்போட்டில் கைதுசெய்யப்பட்டதாக 'தன்பீகல்' சஞ்சிகை தெரிவித்திருந்தது.

### இத்தாலியில் போதைப்பொருள் கடத்தல்

அண்மையில் இத்தாலியில் போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக புலிஉறுப்பினர்களை பொலிசார்கைதுசெய்துள்ளனர். 4.8.மில்லியன் டொலர் பெறுமதியான போதைமருந்துடன் கைதுசெய்யப்பட்டுள்ள இவர்களுக்கு அரவிந்தன் என்பவரே தலைமைதாங்கி உள்ளார். கொக்கேயின் எனப்படும் இக்கொடிய போதைமருந்து விற்று வரும் பணத்தினை இலங்கையிலுள்ள புலிகள் குழுவினருக்கு தாம் அனுப்பிவருவதாக இவர்கள்பொலிசாருக்கு தெரிவித்துள்ளனர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

முதலாம் பக்கத் தொடர்ச்சி......

பில் தமிழ்-முஸ்லீம் கட்சிகளுடன் பேசும்போது பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முடிவை நடைமுறைப் படுத்தப் போவதாக கூறியுள்ளார். இவ்வாறு அங்கொன்று இங்கொன்றாக சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு பேசிவரும் இவரின் இரட்டைவேடம் அம்பலமாகியுள்ளது.

### புலிகள்-பிரேமா இரகசியச்சந்திப்பு

இது இவ்வாறிருக்க வவுனியா சென்ற பிரேமதாசா தனது உதவியாளரான ஜோன் அமரதுங்காவின் உதவியுடன் புலிகளின் ஏஜென்டுகளுடன் இரகசியப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளதாக தெரியவருகிறது. பலவழிகளாலும் பலவீனப்பட்டு பல தோல்விகளைச் சந்திச்சுவரும் புலிகளுக்கு இந்த சமிஞ்ஞை ஒரு வரப்பிரசாதமாகும். புலிகள் இன்றுள்ள சூழ்நிலையில் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள, தமிழ்பேசும் மக்களை கொன்று குவிக்கும் பிரேமதாசாவிடம் சரணடைவார்கள் என்பது சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாகிறது.

## என்னநடந்தது?

புலிகளின் தலைவர்கள் மத்தியில் குழப்பநிலை நிலவுவதற்கு மேலும் பலசம்பவங்கள் நாளாந்தம் நடைபெற்று வருகின்றது. அண்மையில் கடாநாட்டிற்கு விஜயம்செய்த பத்திரிகையாளர்களிடம் ஈரோசின் முன்னாள் தலைவரும் தற்போதைய புலி முக்கியஸ்தருமான பாலகுமார் தெரிவிக்கையில் காலியான பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி தொடர்பாக பிரபாகரனிடம் கேட்டபோது பிரபாகரன் அதற்கு மறுப்பு தெரிவித்துவிட்டார் என்று குறிப்பிட்டுள்ளார். இதேவேளை புலிகளின் தீவிர ஆதரவாளரான முன்னாள் மாநகர ஆணையாளர் சிவஞானம் அதே பத்திரிகையாளரிடம் தாம் பாராளுமன்றம் போகத்தயார் என்றும் அரசு தகுந்த பாதுகாப்புக் கொடுத்தால் பதவியேற்கத்தயார் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள புலிகள் மத்தியிலும் உள்ள குழப்பநிலை வெளிநாடுகளில் உள்ள புலிகள் மத்தியிலும் பரவியுள்ளதற்கு சான்றுகள்மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளதாக அவதானிக்கப்படுகின்றது. பிரான்சிலுள்ள புலிகளின் பேச்சாளர் திலகர் பி.பி.சி. தமிழோசைக்கு அளித்துள்ள பேட்டியில் முஸ்லீம் தலைவர்களுடன் தமதியக்கம் பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஆனால் யாழ்ப்பாணத்திலுள்ள யோகி அண்மையில் நல்லூரில் நடந்த விழா ஒன்றில் முஸ்லிம்கள் சந்தர்ப்பவாதிகள் துரோகிகள் என்றும் தெரிவித்துள்ளார்

### மீளக்குடியமர்வு

புலிகள் இருசமூகங்களுக்குமிடையே நீங்காத பகையை ஏற்படுத்துவதில் மும்மரமாக ஈடுபட்டுள்ளனர். மன்னார் மாவட்டத்தில் மீளக்குடியமர்த்தப்பட்ட முஸ்லீம் மக்களுக்கு புலிகளிடமிருந்து மிரட்டல் கடிதங்களும் அச்சுறுத்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## முகத்தாரின் முணுமுணுப்பு

தமிழ்மக்களின்ர பிரச்சனையை தீர்க்கிறதுக்கும் நாட்டில சமாதானத்தை கொண்டு வாரதுக்கும் ஒருபக்கத்தால அரசும் இன்னொரு பக்கத்தால புலியளும் என்னமா கஸ்ரப்படுகினம்.

அதிலயும் பிரேமதாசா வலுகட்டி கண்டியளோ. கொஞ்சக்காலமா சமாதானத்தைப் பற்றிப் பேச தொண்டமான் போனார். தலையை தொங்கப்போட்டுக்கொண்டு வந்தார். பிறகு பாதிரிமார் போய் யாழ்ப்பாணம் பாத்துப்போட்டு வந்திச்சினம். பிறகு என்னடா எண்டால் ஆகப்பேய்ப்பகிடி தொண்டமான் பேசப்போகயுக்குள்ள இவரார் பேசுறது எண்டு இனவாதத்தைக் கக்கின பிக்குமாருக்கு இருந்தாப்போல புத்தறிஞானோதயம் வந்து நாங்களும் பேசப்போறம் எண்டு வெளிக்கிட்டிச்சினம் போய்ப் பேசினவிசயம் என்னடா எண்டால்

புலிகள் பிடிச்சுவைச்சிருக்கிற ஆமிக்காரரை விடுங்கோ உங்கட ஆக்கள் (அதுதான் அமுதலிங்கத்தின்ர கொலையை செய்தவை எண்டு பிடிச்சுவைச்சிருக்கிறவையளை) நாங்கள் விடுகிறதுக்கு ஜனாதிபதியோட கதைக்கிறமெண்டமாதிரி பண்டமாற்று பேசிப் போட்டு வந்திருக்கினம்.

சமயத்தலைவர் மாருக்கும் நல்லமனம். புலியளின் சித்திரவதைக் கூடத்தில ஐயாயிரத்துக்குமேல அடைபட்டு எந்த நிமிடம் மண்டையில வெடிவிழும் எண்டு எங்கித்தவிக்கிற மக்களைப்பற்றி ஒருவார்த்தை பேச தைரியம் இல்ல. மனிதவிடுதலைக்கு பேசவெளிக்கிட்டிருக்கினம் எல்லாரும் விலாசத்துக்கு தானே தவிர வேறை ஒண்டுக்கும் இல்ல. இந்த அரசாங்கத்தின்ர அதிலும் பிரேமதாசாவின்ர நடவடிக்கையை பார்த்தால் எங்கட தமிழ்ச் சினிமாப்படந்தான் நினைவுக்கு வருது.

எப்பிடியும் ரெண்டு மணித்தியாலமாக்கி படத்தை முடிக்கிறதுக்காக சம்பந்தம் சம்பந்தமில்லாமல் பாட்டு, சண்டை, நகைச்சுவை எண்டுசொல்லி கலக்கியடிச்சு ஒரு சாம்பாற்றை உருவாக்கி சனங்களை ஏமாற்றி பணம் சம்பாதிப்பினம்.
இந்த மாதிரித்தான் எங்கட ஜனாதிபதியும் தன்ர அதிகாரத்தை எப்படியாவது காப்பாற்றவேணும் அதுவரையும் இப்படி அப்படியெண்டு இழுத்தடிப்பு நடக்குது.

ஒண்டு மட்டும் வெளிப்படை நாட்டில சமாதானமும் அமைதியும் வந்திடப்படாது எண்டு அரசும் புலியளும் சேர்ந்துதான் வேலைசெய்யினம்.

www.padippakam.com



# அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே!

## அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே !

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியி னராகிய நாம் எமது உன்னதமான தலைவ னாகிய தோழர் பத்மநாபாவை இழந்து இரண்டு வருடங்களாகிவிட்டது. ஈழமக்கள் தம்முடைய தலைமையின் ஒருபங்கை ... ஒரு நல்மனிதனை இழந்து இரண்டு வருடங்கள் போய்விட்டன.

இருந்தும் இரண்டுவருடங்களுக்கு முன்னர் தமிழ் நாட்டில் மனிதநேயத்தை.... மக்களின் அன் பனை... மகத்தான தலைவனை புலிகள் படு கொலை செய்ததை மறப்பதற்கு மனது மறுக் கிறது. மாறாதகாயம் இன்னும் நெஞ்சில் இரணமாக இருக்கிறது.

தோழர். பத்மநாபா வெறுமனே அதிகார வெறியும், தேசியவெறியும் கொண்ட ஒரு தலைவனல்ல. உலகம் முழுவதையும் நேசித்த ஒரு உன்னதமான மனிதன். உலகின் ஒடுக்கப் பட்ட மக்களையும், உலகத் தொழிலாளர் களையும் நேசித்த நல்லமனிதன். 'தினகரன்' பத்திரிகையின் அரசியல் விமர்சகர் திரு முத்துலிங்கம் குறிப்பிட்டது போல ஒரு சர்வ தேசியவாதி. பாரிசிலிருந்து வெளியாகும் 'சமர்' இதழ் குறிப்பிட்டதுபோல தனது உண வைக்கூட மற்றவருக்கு கொடுக்கும் ஒரு எளி மையான நல்ல மனிதன்.

தோழர் பம்தநாபா தமிழ்பேசும் மக்களின் போராட்டம் தோற்றுவித்த புதிய தலைமு றையின் தலைவர் மட்டுமல்ல தமிழ்மக்களின் போராட்டம் தொடர்பாக அவரது ஈடு பாடும், தியாகத்தன்மையும் போராட்டத் தின் யதார்த்தத்தை அவர் புரிந்துள்ள வித மும் எம்மை வியக்கவைத்தன என்று ஸ்ரீ லங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் கே.பி.சில்வா கூறியிருந்தார்.

அதேசமயம் இந்திய கம்யூனிஸ்ட் (மாக்சிச) கட்சியின் அரசியல்பீட உறுப்பினரான ஹரி கிஷன் சிங் சுர்ஜித் தோழர் பத்மநாபா

ஜனநாயகத்தின் மேல் கொண்டிருந்த நம் பிக்கையையும் அதற்கான போராட்டத்தில் இடதுசாரிக் கட்சிகளுடன் அவர்கொண்ட கூட்டும் யதார்த்தத்தை புரிந்து இந்தியா வுடன் அவர் பாராட்டிய நட்பும் ஏகாதிபத் திய அபாயங்கள் குறித்து அவர்கொண்ட எச் சரிக்கையும் அரசியல்முக்கியத்துவம் வாய்ந் தவை எனக்குறிப்பிடுகிறார்.

தோழர் பத்மநாபாவின் முற்போக்குக் கொள்கைகள், சிங்கள உழைக்கும் மக்களின் பிரச்சனைகளைப் புரிந்து கொண்டதன்மை கள், தேசிய விடுதலைப் போராட்டத்தை யும் வர்க்கப் போராட்டத்தையும் இணைத்த பார்வை ஆகியவை முக்கியமானவை. வரலாறு அவருக்கும் அவரது உயர்ந்த கொள்ளைகளுக் கும் இடமளிக்கும் என்கிறார் நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார.

தோழர் பத்மநாப்பா ஒரு புரட்சியாளர்... ஒரு மாக்சிச லெனினிசவாதி... ஒரு தேசிய விடுதலைவாதி... அனைத்துக்கும் மேலாக மனிதநேயம் கொண்ட ஒரு சோசலிசவாதி என பிரபல அரசியல் ஆய்வாளர் டயான் ஜெயத்திலகா குறிப்பிடுகிறார்.

ஜேர்மன் பத்திரிகையாளரான வோல்டர் ஹெல்வர் பத்தநாப்பாமீது நான் மிகுந்த மதிப்புக் கொண்டுள்ளேன். விசுவாசமும்... தூய்மையும் கொண்ட தலைவர் அவர். தமிழ் தேசியவாதத்தை தம்மீது பூசிக்கொள்ளாத வர் நாபா. தமது நடவடிக்கையில் இனவா தத்தை கொண்டிராத அவரும், ஈ.பி.ஆர்.எல் எவ்.உம் தான் தமிழ் அமைப்புக்களுக்குள்ளே யே தென்னிலங்கை முற்போக்கு சக்திகளை நோக்கி நேசக்கரம் நீட்டியவர்கள். அது மாத்திரமல்ல தமிழ்மக்களுக்கு எதிரான படுகொலைகளுக்கு பழிவாங்கும் வகையில் அப்பாவி சிங்கள மக்களை கொலைசெய்யும் பாதகச்செயலில் இறங்காத ஒரே அமைப்பி னர் ஈ.பி.ஆர்.எல். எவ். இனரே. நாபாவின் தலைமைவழி நடத்தலே இதற்குக் காரணம் எனக்குறிப்பிடுகிறார்.

## அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே!

தோழர் பத்மநாபாவின் உன்னதமான குண வியல்புகள் இதுபோல பலவடிவங்களில் முற் போக்காளர்களால் பாராட்டப்பட்டபோ தும் அவரது இறப்பும் முற்போக்காளர்களால் பெரும் இழப்பாக கருதப்பட்டபோதும் நம் மவர்களில் பலரும், நமது செய்திநிறுவனங் களும் தமது முகமூடிகளைக் காப்பாற்றும் பொருட்டும் தமதுஉயிர்களை பாசிசப் புலி களிடமிருந்து பாதுகாக்கும் காரணத்துக் காகவும் மௌனம் சாதிக்கின்றனர்.

அமைதி- சமாதானம்- ஜனநாயகம் இவற்றை அடைவதற்காக உழைத்த தோழர் நாபா வக்கும் அமைதி-சமாதானம் ஜனநாயகம் ஆகியவற்றை படுகொலை செய்துவரும் புலித் தலைமைக்குமுள்ள வேறுபாடுகள் இன்று அனைவ ருக்கும் தெரிய ஆரம்பித்திருக்கிறது.

தோழரின் இறப்பு ஈடுசெய்ய முடியாத இழப். பாக இருந்தபோதிலும் தோழரின் வழி நடத்தல் இன்று ஈழமக்கள் புரட்சிகர விடு தலை முன்னணியை சரியான நிலைப்பாட களை எடுக்க.... தமது உயிரபாயங்களையும் பொருட்படுத்தாது மக்களுக்காக உழைக்கும் .... பாசிசத்துக்கு எதிராக போராடவைத் திருக்கிறது.

> **தோழர்.பத்மநாபா வெறுமனே அதிகாரவெறியும், தேசிய வெறியும் கொண்ட ஒரு தலைவனல்ல. உலகம் முழுவதையும் நேசித்த ஒரு உன்னதமான மனிதன். ஒரு சவ்தேசியவாதி. தனது உணர்வைக்கூட மற்றவருக்கு கொடுக்கும் ஒரு எளிமை யான நல்ல மனிதன். தமிழ்பேசும் மக்களின் போராட்டம் தோற்றுவித்த புதியதலைமுறையின் சிறந்த தலைவர். ஒரு மாக்சிச லெனினிசவாதி, ஒரு தேசியவிடுதலை வாதி. எல் லாவற்றுக்கும் மேலாக மனித நேயம் கொண்ட ஒரு சோச லிசவாதி. தமிழ்தேசியவாதத்தை தன்மீது பூசிக்கொள்ளாத, இனவாதத்தை கொண்டிராத தூய்மையான தலைவர்.**

இன்று அரசபயங்கரவாதத்திலிருந்து தப்பு வதற்காக சிலரும் தமது இருப்புக்களை காப் பாற்றி வசதிகளைப் பெருக்கிக் கொள்வ தற்காக சிலரும் என தமிழ்கட்சிகள் பலவு மே எமது பொது எதிரியான ஸ்ரீ லங்கா அர சின் காலடிகளிலேயே கிடக்கின்றன. இன்றும் சில அமைப்புக்கள் அரசபடைகளுடன் இணைந் து செயற்படுகின்றன.

ஏன் புலிகளின் தலைமைகூட ஒருபக்கம் நூற் றுக்கணக்கான சிறார்களை யுத்தத்தில் பலி கொடுத்துக்கொண்டு மறுபக்கம் இரகசிய மாக பிரேமதாசாவின் அரசுடன் உறவு கொள்கின்றன.

இத்தகையதொரு நிலையில் தமது உறுப்பி னர்களுக்கு எதிரான அரசஅடக்கு முறைகளை யும் உயிர் பயமுறுத்தல்களையும் பொருட் படுத்தாது அரசபயங்கரவாதத்துக்கும் எமது மக்களுக்கெதிரான ஒடுக்குமுறைகளுக்கு எதி ராக குரல்கொடுப்பதிலும், அரசுக்கெதி ரான ஜனநாயக ரீதியான போராட்டங்க ளில் தென்னிலங்கை முற்போக்கு சக்திகளு டன் தன்னை இணைத்துக் கொள்வதிலும் இன்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனித்த ஒரு தமிழ்கட்சியாக இருக்கிற தென்றால் அதற்கு தோழர் நாபாவின் வழி நடத்தலைத்தவிர வேறு என்ன இருக்க முடியும்.

சிங்கள மக்களிடையே தமிழ்மக்கள் தொட ர்பாக இருந்துவந்த விரோதங்களை குறைத் துக்கொள்ளும் வகையில் அவர்களிடையே தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைகளையும் அவர்களுக்கு இழைக்கப்படும் இராணுவக் கொடுமைகளையும் அவர்களுக்கு புரியச்செய் தலிலும் சமீபகாலங்களில் ஈழமக்கள் புரட் சிகர விடுதலை முன்னணி பெரும்பங்கு வகித் துவருகிறது.

அதுபோலவே தென்னிலங்கை கட்சிகளுடனும், நடந்துகொண்டு இனப்பிரச்சனை தொடர் பான தீர்வு ஒன்று விரைவில் காணப்பட வேண்டியதை அவர்களுக்கு வலியுறுத்துவதிலும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கனிசமான பங்களித்திருக்கிறது.

இதற்கு உதாரணமாக சமீபத்தில் பொலந றுவை மாவட்டத்தில் முஸ்லீம் மக்களுக்கு எதி ராக புலிகள் படுகொலைபுரிந்து வடக்கு- கிழக்கு திரந்தர இணைப்பு தொடர்பாக முக்கிய முடிவு எடுக்கும் நேரத்தில் முஸ்லீம் மக்களையும் அவர்களது அமைப்புக்களையும் ஆத்திரமூட்டி இணைப்புக்கு எதிராக திருப்ப முயன்றபொது முஸ்லீம் காங்கிரஷ் போன்ற அமைப்புக்களை ஈழமக்கள் புரட்சிகர விடு தலை முன்னணி அணுகி சரியான நிலைக்கு கொண்டுவர எடுத்த முயற்சிகளையும்....

இனப்பிரச்சனை தொடர்பாக நியமிக்கப் பட்ட பாராளுமன்றக்குழுவை பகிஷ்கரிக்கப் போவதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அறி வித்தவுடன் அக்கட்சியின் முக்கியஸ்தர்களை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அணுகி இதனால் ஏற்படக்கூடிய பாதக விளை வுகளை விளக்கியதையும் குறிப்பிடலாம்.

இவைமாத்திரமல்ல இன்று அரசின் அடாவ டித்தனத்துக்கும், அடக்குமுறைக்கும் பயந்து அரசபயங்கரவாதம் குறித்துப் பேசப்பயந்து பலர் மௌனித்துப்போய்விட்ட வேளையிலும் துணிவுடன் ஸ்ரீ லங்கா இனவாத அரசை பகி ரங்கப்படுத்துவதில் ஈ.பி.ஆர். எல். எவ். முன் நிற்கிறது. தமிழ்பேசும் மக்களுக்கு இழைக் கப்படும் கொடுமைகளை சர்வதேச மனித உரிமை அமைப்புக்களுக்கு ஆதாரங்களுடன் சமர்ப்பிக்கிறது. ஸ்ரீ லங்கா அரசின்மீது சர் வதேச நெருக்குவாரத்தை பிரயோகிப்ப தற்கான வழிகளைத் திறக்க ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முயல்கிறது. நவீன உலகிலும், இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்சனையிலும் இந்தியாவின் வலிமையை யும் அது ஆற்றவேண்டிய பங்களிப்பையும் புரிந்துகொண்டு இந்தியாவுடன் நட்புறவை பேணமுனைகிறது. ஸ்ரீலங்கா அரசின் மீது இந்தியாவைக் கொண்டு அரசியல் அழுக்கங் களை பிரயோகித்து இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண....ஈழமக்கள் அமைதியாக வாழ ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முனைகிறது.

அதேசமயம் ஈழ அகதிகளை திருப்பி அனுப்பு தல் போன்ற இந்தியஅரசின் அவசரத்தன மான தவறான முடிவுகளை ஈழமக்கள் புரட்சி கர விடுதலை முன்னணி எதிர்த்தேதிற்கிறது

ஸ்ரீ லங்காஅரசு இன்று தமிழ்பேசும் மக்கள்மீது தொர்டர்ந்திருக்கும் யுத்தத்தை எதிர்த்து நின்று எந்த ஒத்துழைப்பும் வழங்க மறுத்து வரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன் னணி புலிகளின் பாசிசத்துக்கு பயந்து பின் வாங்கவில்லை.

இன்றைய எமது சரியான நிலைப்பாடுகளுக் கும்... முன்னெடுப்புக்களுக்கும் காரணமான எமது உன்னத தலைவனை நாம் மீண்டும் ஒரு தடவை நினைத்துப் பார்ப்பதுடன் அவரது சிந்தனைகளையும் வழிநடத்தல்களையும் தொடர்வோம்.... அமைதி, ஜனநாயகம், சமாதானம் ஆகியவற்றை நோக்கி உழைப் போம் என உறுதி கொள்வோம்.

## ஒரு மரணத்தில் பிரசவம்....

செந்தோழன் குருதி
குண்டுபட்டு சிதறி- சிவந்த
சென்னை மண்ணும் மதிலும்
கண்ணை நனைக்க- மனதில்
மரணித்த தோழன்.

கலவையை கருத்தரித்து
கனத்த இதயங்களில்
மகிழ்ச்சிக் குழந்தையை
பிரசவிக்கப் புறப்பட்ட
புரட்சித் தோழன்.

விடுதலை வயலில்
போராட்டப் பயிர்களோடு
-போலிகள்
போராளிப் போர்வையில்
ஈழத் தெருக்களில்
மனிதத்தின் குரல்வளையில்
குருதி உறுஞ்சி
தீராத தாகம்
இவன் குருதி ஊற்றுக்கும்
குறிவைத்தது.

மண்ணிற்காய் மரணித்த
மக்கள் தொண்டன்
மரணத்தால்
மீண்டும் மலர்கிறான்.

மணத்தால் மலரை
மனனிக்கும் மனிதம்
குணத்தால்
இவனை மனனிக்கும்.
கொள்கையால்
இவனைப் பின்பற்றும்.

-: பி.கே. ரூபன் :-
பிரான்ஸ்

படிப்பகம்

www.padippakam.com

# ஓ தோழர்களே!! உங்களதுமர

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

## புரட்சிகர இரண்டா




தோழர்.கிருபா

★ ★ ★ ★ ★



தோழர்.ஜெசிந்தா

★ ★ ★ ★ ★



சக்தி வாய்ந்த ஒரு
இழந்து விட்டோம்.
பிரம்மாண்டமானது
முடியாதது. ஆனா
வைத்த அழுத
நாம் செலுத்தும் அ
வளர்க்கப்பட்ட நாம்
கடமைகள் குறித்து
கடக்க வேண்டிய
நீண்டதாகவே உள்

எதிலும் தன்னை மு
கொள்ளாது செயல்
எதிர்ப்பார்ப்பார் தே
கட்டுக்கடங்காத பா
ஒவ்வொருவர் நலன
செலுத்துவார்; எல்
என்பதையே முதன்
ஒடுக்கப்பட்ட உழை
சார்பிலிருந்தே ஒவ்
அடக்கமாய் ஒரு ம
எல்லோர் சொல்வ
ஓரிரண்டு வார்த்தை
தெளிவுபடுத்தி விடு
விழிகளால் நேர்நோ
சிரிப்பார். பிழை செ
நாணப்படவைக்கும்
அரவணைத்தே திரு

## நீங்கள் பதித்த சுவடுகளில்...... உங்கள்



தோழர்.முகமட் மிஹ்னார்



தோழர்.ரவி



தோழர்.கோமளராஜா



தோழர்.முகுந்தன்

படிப்பகம்

# ...ம் வாழ்வின் ஒரு முடிவல்ல...

## ...ஆண்டு அஞ்சலி


★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

...மைத் தோழரை
...து இந்த இழப்பு
...ம் தாங்கிக் கொள்ள
...காக ஒப்பாரி
...ருப்பதல்ல அவருக்கு
... அவரால்
...ங்களது எதிர்காலக்
...ாக உள்ளோம்.
இன்னும்

...லைப்படுத்திக்
...வேற்றங்களையே
...த்மநாபா.
...ப் பொழிவார்.
...அக்கறை
...லும் மனித நேயம்
...டுத்தினார்:
மக்களின்
...றையும் சிந்தித்தார்.
...ன் போன்று
கேட்டுக் கொள்வார்.
தனது கருத்தைத்
கூர்மையான
...ழந்தையாய்ச்
...ர்களை ஆயுளுக்கும்
...து கேலியும் சிரிப்பும்
...ர். பழகும்

பண்பினால் அனைவரையும் வென்றுவிடுவார். எதிரிகளையும் வெல்ல வேண்டுமே தவிர அழிப்பது நம் நோக்கமில்லை என்பார். ஓ! கம்பீரமான மனிதர் எங்கள் தோழர். அவரது பொதுவாழ்க்கைச் சேவைகள் மிகத் துணிச்சலானவை. அவர் தீரர். மிகச் சிறந்த மக்கள் பக்தர். தனது வாழ்க்கையால் நமக்குப் பாடம் சொன்னவர். மக்களால் நேசிக்கப்பட்ட ஒரு உன்னத மனிதர் கொல்லப்பட்டு விட்டது எமது கட்சிக்கும் தேசத்திற்கும் ஈடு செய்ய முடியாத இழப்புத்தான். எங்கு தேடினாலும் கண்டுபிடிக்க முடியாத அந்த மனிதாபிமானம் மிக்க தலைவரின் குறுஞ்சிரிப்பு பூத்திருக்கும் முகத்தைக் குண்டுகள் துளைத்திருக்கக் காட்டிய அந்த மாலைக் கருக்கலை மன்னிக்கவே முடியாது.

அவரது பெருமை நீடித்து நிலவட்டும். அவர் பெயரும் லட்சியமும் புனிதப்படட்டும். அவரால் விடப்பட்ட கடமைகள் நிறைவேற்றப்படட்டும். அவரை நாம் நன்றியுடனும் அன்புடனும் தோழமையுடனும் எப்போதும் நினைக்கிறோம். அவரால் பெற்ற பலத்தோடு மனவளர்ச்சியை ஸ்தாபித்து நாம் எம்முள் வளர்ப்போம். தோழர் எஸ்.ஜி.யின் உடம்போடு அவரது சிறப்புகள், அவர் கொண்டிருந்த இலட்சியம் எல்லாம் போய் விடவில்லை என்பதைக் கொலைகாரர்களும் தெரிந்து கொள்வர்.


தோழர்.சங்கரி

★ ★ ★ ★ ★


தோழர்.கவிதா

★ ★ ★ ★ ★

## ...லட்சியங்கள் வெல்லும்வரை போராடுவோம்.


தோழர்.தருமன்


தோழர்.லிங்கன்


தோழர்.புவிநாதன்


தோழர்.ரவி

www.padippakam.com



# வாசகர் பார்வையில்...

தமிழ் மக்களின் உயிரும், வாழ்வும்..., சிந்தனைகளில், கொள்கைகளில், செயற்பாடுகளில் எவ்வித முரண்பாடுமற்ற, ஒருமைப்பாடு கொண்ட இரு அமைப்புக்களால் சமகாலத்தில் நிர்ணயிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. புலிகள்-ஸ்ரீ லங்கா அரசே அந்த இரு அமைப்புகளுமாகும். இவர்கள் இருவருக்கும் இடையே உள்ள நலன்களின் பரிமாற்றங்களை அம்பலப்படுத்துவதில் தமிழ் மக்களின் அரசியல் வாழ்வில் 'புதியபார்வை' தீர்மானகரமான தாக்கத்தை ஏற்படுத்தினாலும்! முற்போக்கு பத்திரிகை என்ற வடிவத்துக்குள் வரமறுக்கின்றது. ஈ.பி.ஆர்.எல். எவ். கட்சியின் பத்திரிகை என்ற வட்டத்துக்குள் திருப்தன் மூலம், வெளிநாடுகளில் வாழும் பல்வேறுபட்ட சக்திகளை (தமிழ் மக்களுக்குள்) ஒருமைப்படுத்தமுடியாத சூழ்நிலை நிலவுகின்றது

எமது தேசத்தின் அரசியல், சமூக, பொருளாதாரத்தின் செயற்பாடுகளை எதிர்கால சந்ததியினரிடம் எந்த வகையில் கையளிக்கப் போகின்றோம்?

எமது மக்களின் தன்மானத்தை மீட்பதற்காக எமது சுதந்திரத்தையும் உரிமையையும் மீட்டெடுப்பதற்காக, மக்களின் உன்னதமான கலாச்சார வளர்ச்சிப் போக்குக்காக அதன் வழியில் மக்களை இறுதிவரை சுமந்து செல்வதற்கான எதிர்காலச் சந்ததியினரை சமூகவிஞ்ஞானக் கண்ணோட்டத்தின் ஆய்வுகள் மூலமாகவே அவர்களை சிந்திக்க, செயற்பட வைக்கமுடியும்.

இன்றைய காலகட்டத்தில் புலிகளினதும், பேரினவாத ஸ்ரீ லங்கா அரசினதும் மக்கள் விரோத நடவடிக்கைகளை அம்பலப்படுத்துவதில் எவ்வளவு முக்கியத்துவம் அடங்கியுள்ளதோ, சமஅளவு முக்கியத்துவம் எதிர்கால சந்ததியினரின் கலாச்சார வளர்ச்சிக்கான ஆய்வுகளை வெளிப்படுத்துவதன் மூலமே புதிய பார்வையின் மதிப்பும். முக்கியத்துவமும் அடங்கியுள்ளது.
அந்த வகையில் இலங்கை சுதந்திரமடைந்த காலகட்டத்திலிருந்து இன்றுவரை எமது தமிழ் சமுதாயத்தை நிர்ணயிக்கின்ற அரசியலில், ஆதிக்கம் செலுத்திவந்த சக்திகள், வரலாற்றைபடைக்கும் முக்கிய சக்தியாக மக்கள்திரளினரைக் கருதாது, மக்களை அன்னியப்படுத்தி தன்னிச்சையாக அரசியல் நடாத்தி வந்ததை வரலாற்று ரீதியாக பொதுமைப்படுத்தி பரிசீலனைக்குட்படுத்தவேண்டிய கட்டாய தேவை, வெறுமனே தத்துவங்களையும் சித்தாந்தங்களையும் அணைத்துக் கொண்டு களிர்காயாமல், நடைமுறைக்கேற்ப தனது அரசியல் நடவடிக்கைகளை சமுதாயப் பொறுப்புடன் நகர்த்திவரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கட்டாய தேவையாக அமைகின்றது.

கடந்தகால அரசியல் நடவடிக்கைகளின் விளைபொருள்தான் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்ற போதிலும், இயங்கியல் ரீதியிலான ஆய்வுக்கட்படுத்துகையில் நாளைய எமது சமுதாய சக்திகள் எப்படி உருமாறிக் கொண்டு வருகின்றது என்பதைப் பார்த்தால்.....!
சிந்தனையின் வேர்கள் அறுக்கப்பட்டு, பாசிசத்தின் விதைகள் தூவப்பட்டு, மானுடத்தின் விரோதிகளாக விநோதமான 'ஜந்துக்களின்' நவீன பரிணாம உற்பத்தி நடந்து கொண்டிருப்பதை இன்றைய எமது சமுதாயத்தின் அநுபவமும், யதார்த்தமும் புலப்படுத்துகின்றன.
இன்றைய எமது அரசியல், சமூக, பொருளாதார நகர்வுகள் யாவும் சாஸ்வதமானவை அல்ல. இயங்கியல் விதிகளுக்குட்பட்டு மாறும் தன்மை கொண்டவை.
இன்றைய எமது சமுதாய விவகாரங்களைப் பற்றி கணிப்பீடு செய்து, மக்களை வழிநடத்திச் செல்லும் நாளைய சந்ததியினர் யார்? புலிகளால் உற்பத்தி செய்யப்பட்டு வரும் விநோத 'ஜந்துக்களா'? யார்?... சமூகப் பார்வைக்கு எட்டிய தூரம் யாரும் தென்படவில்லை.

ஆகவேதான் வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள்தான் பெரும்பாலும் இதற்கு மாற்றுக் காரணிகளை தேடக்கூடியவாய்ப்பும், வசதியும் மிக்கவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களை மையப்படுத்துவதிலும், தேசிய அடையாளங்களையே இழந்தும், மறந்தும் வாழும் தமிழ் மக்களை ஒழுங்கு படுத்துவதிலும் 'புதியபார்வை' தனது அடையாள முத்திரையை பதிக்காமல் நகரமுடியாது.

வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களின் நோக்கு நிலையிலிருந்து அவர்களை சமூகப் பொறுப்புடையவர்களாக மாற்றும் ஆய்வுகளும், ஆக்கங்களும் 'புதியபார்வையில்' வெளிவரவேண்டுமென்பதே எனது ஆதங்கமாக உள்ளது. (ஒலி-பிரான்ஸ்)

★ ★ ★ ★ ★ ★ ★

புதியபார்வையில் பொதுவான செய்திகள் குறைக்கப் படவேண்டும். பொதுவான செய்திகளை வீரகேசரி முதல் ஐரோப்பாவில் வெளிவரும் அனைத்து சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் தெரிந்துகொள்ள வாய்ப்பு உண்டு. ஆனால் ஈ.பி.ஆர். எல். எவ். செய்திகளை வெளிநாடுகளிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகளும் சரி, பத்திரிகைகளும்சரி திட்டமிட்டு இருட்டடிப்பு செய்கின்றன. வீரகேசரி செய்திகளை அரைகுறையாகவே வெளியிடுகின்றது. அல்லது மறைமுகமாக தலையங்கங்களில் ஈ.பி.ஆர்.எல்.எவ். என்ற பெயரை மறைத்து விடுகிறது. இந்நிலையில் E.P.R.L.F. கட்சிப் பத்திரிகையான புதியபார்வை ஈ.பி.ஆர்.எல்.எவ். செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து முழுமையாக வெளியிட வேண்டும். உண்மையை மறைத்து புலிகளை இராஜாதி ராஜாக்களாக காட்ட முனையும் வெளிநாட்டு சஞ்சிகைகள், பத்திரிகைகள் மத்தியில் புலிகளின் அடாவடித்தனங்களை, அட்டூளியங்களை, அராஜக நடவடிக்கைகளை அரசியல் வங்குரோத்து தனங்களை அம்பலப்படுத்தும் ஒரேயொரு பத்திரிகை புதிய பார்வையேயாகும். இது தொடர வேண்டும் பலபேரின் கண்களைதிறக்க இது உதவுகிறது அரசையும் புலிகளையும் மக்கள் விரோத சக்திகளாக ஒருதட்டில் வைத்துப் பார்க்கும் புதியபார்வை முற்றிலும் சரியானதே.

ஸ்ரீதிவாகரன் (கொலண்ட்)

★ ★ ★ ★ ★ ★ ★

புதியபார்வையில் புலிகளைப் பற்றிய செய்திகளே அதிகமாக காணப்படுகின்றன. பத்திரிகைகளைத் திறந்தால் முறிந்தபனை, அரசியல் அழிவுகள், லண்டனிலிருந்து எழுதும் அம்பியின் கட்டுரைகள், செய்திகள், அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே, எமது பார்வையில், முகத்தாரின் முணுமுணுப்பு, சொன்னாலும் வெட்கமடா அனைத்திலுமே புலிகளை பற்றியவையே அதிகமாக வெளிவருகின்றன. புலிகள் இன்று சர்வதேச ரீதியில் அம்பலப்பட்டுப் போயிருக்கிறார்கள். அவர்களைப் பற்றி இன்னும் எழுதவேண்டுமா என்றொரு கேள்வி எழுகிறது. இவற்றைக்குறைத்து E.P.R.L.F. யின் திட்டமென்ன. E.P.R.L.F. என்ன செய்யப் போகிறது போன்ற விடயங்களை கூடுதலாக எழுதினால் என்போன்ற வாசகர்களுக்கு பிரியோசனமாக இருக்கும் என நம்புகிறேன்.

நிரஞ்சன் (ஜேர்மனி)

★ ★ ★ ★ ★ ★ ★

புலிகள் கடந்தகாலங்களில் நடத்திமுடித்த பாசிசநடவடிக்கைகள், இப்போது நடாத்திக் கொண்டிருக்கும் வெறியாட்டங்கள் அனைத்துக்குமே அவர்களின் பொய்ப்பிரச்சாரங்களில் வீழ்ந்துபோய் உதவிசெய்து இன்றுவரை அவர்கள் தங்களை தங்கவைக்க காரணமாயுள்ள வெளிநாட்டில்வாழும் தமிழ் பேசும் மக்கள்மத்தியில் புலிகளின் உண்மை சொரூபங்களை தோலுரித்துக் காட்டும் ஒரேயொரு பத்திரிகை 'புதியபார்வை' ஆகும் புதியபார்வை இதில் செய்யும் பங்கு போதாது. இன்னும் வெளிநாட்டில் வாழும் தமிழ்பேசும் மக்கள் புலிகளின் உண்மை நிலையை உணர்ந்து அவர்களை ஓட விரட்டும் வரை புதியபார்வை தனது சேவையை செய்ய வேண்டிய கட்டுப்பாடுள்ளது. ஏனெனில் வெளிநாட்டில் வாழும் தமிழ்பேசும் மக்கள் புலிகளை புறக்கணிக்கும் போதுதான் தாயகத்தில் வாழும் தமிழ்பேசும் மக்களுக்கு புலிகளிடமிருந்து விடுதலை கிடைக்கும். அமைதி, சமாதானம், ஜனநாயக சூழல், சகஜவாழ்க்கை அனைத்தும் கிடைக்க வழிபிறக்கும். இன்றும் அவர்கள் தாயகத்தில் பாசிச நடவடிக்கைகளை மேற்கொள்ள அநுசரணையாக வெளிநாடுகளில் எத்தனையோ புலிகளின் அருகுழல் சஞ்சிகைகள், பத்திரிகைகள், புலிகளின் பினாமி பத்திரிகைகள் செயற்பட்டு புலிகளை மாவீரர்களாக சித்தரிக்கின்றன. இந்நிலையில் புதியபார்வையும் தனது பங்களிப்பை நிறுத்தினால் என்ன நடக்கும்? யதார்த்த சூழ்நிலைக்கு ஏற்பவே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது, வருகிறது, வரும். ஆகவே வடக்கு கிழக்கில் புலிகளின் துப்பாக்கி முனைகளில், சிறைகளில் மக்கள் மிரட்டப்பட்டு சித்திரவதைகளுக்குள்ளாக்கப்பட்டு, கப்பம் என பொருளாதார ரீதியில் ஒடுக்கப்பட்டு மக்கள் சொல்லொணாத் துன்பங்களையும் கொடுமைகளையும் புலிகளின் அரசியல் வறுமையால் மேற்கொண்டுவரும் அர்த்தமற்ற யுத்தத்தால் ஏற்பட்டு வரும் இழப்புக்களையும் சந்தித்து வருகின்றனர். கிழக்கில் திரைமறைவில் அரசின் திட்டமிட்ட குடியேற்றங்கள் நடக்கின்றன. இராணுவ நடவடிக்கைகள், காரணமின்றி கைதுசெய்யப்படல், காணாமல் போகுதல் போன்ற இலங்கையரசின் அட்டூளியங்கள் தலைவிரித்தாடுகின்றன. வடக்கையும் கிழக்கையும் பிரிக்க அரசு பகீரதப் பிரயத்தனத்தை மேற்கொள்கிறது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆனது இவற்றுக்கு எதிராக அரசியல் ரீதியாக போராடுதல், சர்வதேச ரீதியில் இவற்றை அம்பலப் படுத்துதல் போனறவற்றையே இன்றைய சூழலில் தனது அரசியல் கடமையாக கொண்டு செயற்படுத்தி வருகிறது. இதனை செய்திகள், பாராளுமன்ற உரைகள், கட்டுரைகள் மூலம் புதிய பார்வை வெளியிட்டு வருகிறது.

களத்தின் கதாநாயகர்களாக இலங்கை அரசும், புலிகளும் இருக்கும் போது அவர்கள் பற்றி எழுதுவது தவிர்க்க முடியாதது. இதனை புதியபார்வை தொடர்ந்து உறுதியுடன் மேற்கொள்ளும். ஆ-கு

★ ★ ★ ★ ★ ★ ★

★ ★ ★ ★ ★

★ ★ ★ ★ ★

## புலிகளினால்... இனவெறியாட்டம்

பொலநறுவை மாவட்டத்தில் சமீபத்தில் நடந்த மனிதப் படுகொலைகள் இரத்தத்தை உறையவைக்கின்றன. அழிஞ்சிப் பொத்தானை முஸ்லீம் கிராமத்துள் புகுந்து புலிகள் ஆடிய கொலைவெறியாட்டமும், அதற்குப் பழிவாங்கும் வகையில் அரசாங்கத்தால் ஆயுதபாணிகளாக்கப்பட்ட முஸ்லீம் ஊர்காவல் படையினர் நடாத்திய கோரத்தாக்குதலும் முப்பத்தாறு மணித்தியாலங்களில் நூற்றுக்கு மேற்பட்ட அப்பாவி மக்களை பலியாக்கியுள்ளது.
யாழ்ப்பாணத்திலிருந்தும்.... மன்னாரிலிருந்தும் புலிகள் எப்போது முஸ்லீம் மககளை விரட்டியடித்தார்களோ... எப்போது அவர்கள் இரத்தம் சிந்தி உழைத்துச் சம்பாதித்த பொருட்களை, வீடுகளை சூறையாடி கயிறுகட்டி விற்றார்களோ.... எப்போது முஸ்லீம் வர்த்தகர்களையும், பிரமுகர்களையும் கடத்திவைத்து இலட்சக் கணக்கான ரூபாய்களை கப்பமாக பறித்தார்களோ... அப்போதே தமிழ்-முஸ்லீம் இனங்களைப் பிரிக்கும் விஷவித்தை ஊற்றினார்கள்.
காததான் குடியிலும், ஏறாவூரிலும் கிழக்கின் இதரபகுதிகளிலும் புலிகள் முஸ்லீம் மக்கள்மீது மேற்கொண்ட படுகொலைகளின் மூலம் தாம் விதைத்த விஷவித்தை விஷவிருட்சமாக்கி விட்டனர்.
ஊறுபட்டிருந்த தமிழ்-முஸ்லீம் இனங்களைப் பிரிப்பதற்கான அரியசந்தர்ப்பத்தை புலிகள் தங்கத்தட்டில்வைத்து தமக்குவழங்கியதால் ஆனந்தமடைந்த அரசு தனது கைக்கூலி கும்பல்களைப்பிடித்து இனவெறியையும், இரத்தவெறியையும்ஊட்டி ஆயுதங்களும்வழங்கி கிழக்கில்பல்வேறிடங்களில் அப்பாவி தமிழ்மக்கள்மீது ஏவிவிட்டது அரசாங்கத்தின் ஆசியுடன் முஸ்லீம் ஊர்காவல் படையினர் கிழங்கில் அப்பாவி தமிழ்மக்கள் மீது நடாத்திய படுகொலைகளும், கொள்ளைகளும் இருஇனங்களுக்கிடையேயான விரோதத்தையும் குரோதத்தையும் அதிகமாக்கியது.

இருப்பினும் சமீபகாலங்களில் இந்த இரு இனங்களை சேர்ந்த மக்களும் புலி எதிரியின் தந்திரத்தையும், பொது எதிரியின் தந்திரத்தையும் புரிந்து கொள்ள ஆரம்பித்திருந்தனர். அன்றாட வாழ்க்கையின் அவலங்களும் பொருளாதார சீர்குலைவும் போரின் சுமைகளும் ஐக்கியத்தின் அவசியத்தை மக்களுக்கு உணர்த்தஆரம்பித்தன தமிழ் முஸ்லீம் கட்சிகள் இனப்பிரச்சனைக்கான தீர்வை இழுத்தடிக்கும் அரசுக்கு எதிராகவும், இனப்பிரச்சனை சம்பந்தமாக இரட்டைவேடம் போடும் சிங்கள பேரினவாத அமைப்புகளுக்கு எதிராகவும் இணையவேண்டிய அவசியத்தை உணர ஆரம்பித்தன.
அரசியல்ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வடக்கு கிழக்கு நிரந்தர இணைவு தொடர்பாக தமிழ் முஸ்லீம் கட்சிகள் ஓர் இணக்கத்தை நோக்கிச்செல்ல முற்படுகையிலே இந்த இரத்தப் படுகொலைகள் நிகழ்த்தப் பட்டுள்ளன.
சுமூகமான தீர்வு ஒன்றை ஏற்படுவதையோ அல்லது இனங்கள் சினேகத்துடன் வாழ்வதையோ தாங்கள் விரும்பவில்லையென்பதையே புலிகள் மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தி உள்ளனர்.
கொல்வதும் பின்னர் வெளிநாடுகளில் மறுப்பறிக்கை விடுவதும் மறைவில் மார்தட்டிக்கொள்வதும் புலிகளின் வழமையான செயல்கள் தான்.

படிப்பகம்

www.padippakam.com



# சுதந்திர ஜனநாயக பொருளாதார மாற்றத்தை உருவாக்குவோம்.

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மேதின அறைகூவல்....

எமது நாட்டுத் தொழிலாளி வர்க்கம் தமது உழைப்பால் உருவாக்கிய அனைத்துத் தொழில்களையும் வளங்களையும் இன்று அந்திய நாட்டவரின் முதலீட்டு வலயங்களுக்கும், தனியார் மயப்படுத்தலுக்கும் இழந்து வருகிறார்கள். வெளிநாட்டு நிலதனத்துக்கு எமது நாட்டுத் தொழிற்சட்டங்களே செல்லுபடியற்ற சுதந்திர வர்த்தகவலயத்தில் எமது நாட்டுத் தொழிலாளர்கள் சுதந்திரம் எதுவுமற்ற வர்த்தகப் பொருளாக மாற்றப்பட்டு விட்டார்கள். அவர்களின் தொழிற்சங்கம் அமைக்கும் சுதந்திரம் கூட மறுக்கப்பட்டு முதலீட்டாளர்களுக்கு சர்வ சுதந்திரம் வழங்கப்பட்டு விட்டது.

எமது வடக்கு கிழக்கு மாகாண அரசில் ஒரு பகுதியாகிய திருகோணமலைத் துறைமுகத்தில் பிறிமா மாஆலைக்கு இறங்குதுறையே வழங்கப்பட்டு விட்டது. அங்கே கப்பலிலுள்ள கோதுமை நேராக ஆலைக்கே செல்கிறது அதேபோல் அங்கரைக்கப்படும் மா மீண்டும் சுதந்திரமாக கப்பலில் வெளியேறுகிறது. இங்கு சுங்கப் பரிசோதனை இருக்கிறதா என்பது கூடத்தெரியவில்லை. இதைப் போலவே டோக்கியோ சீமெந்து ஆலைக்கு தேவையான மூலப்பொருட்கள் கூட கப்பலில் இருந்து நேராக ஆலைக்கு வருகிறது. எமது நாட்டிலுள்ள எந்த உற்பத்தியாளருக்கும் இல்லாத தனிச்சலுகை மேற்படி வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எமது நாட்டின் சுதந்திரம் அந்திய முதலீட்டாளரால் எவ்வாறு பறிமுதல் செய்யப்படுகிறது என்பதற்கு இவைநல்ல உதாரணங்களாகும்.

இந்தவிதமாக எமது நாட்டின் பொருளாதார சுதந்திரம் எமது நாணயமதிப்பு என்பன உலகவங்கி, சர்வதேச நாணயநிதியம் ஆகியன வற்றால்தான் நிர்ணயிக்கப் படுகிறது. இலங்கை விவசாயிகளுக்கு உரமானியம் வழங்குவது எமதுநாட்டு ஏழைமக்களுக்கு உணவு மானியம் வழங்குவது இவ்வாறுதான் நிறுத்தப்பட்டு விட்டது. இதனால் கடந்த 15வருட ஆட்சியில் அமெரிக்க டொலர் ஒன்று 5 1/2 மடங்குக்கு மேலாக பெறுமதி அதிகரிக்க எமது ரூபா நாணயம் 5 1/2 மடங்கு பெறுமதி குறைந்துவிட்டது. இந்தவகையில் விலைவாசி நாளும் பொழுதும் விஷம்போல் ஏறிவர இதற்கேற்ற ஊதிய உயர்வு அற்றமுறையில் இலங்கை உழைக்கும் மக்கள் அவதியுறுகிறார்கள். அந்திய பொருட்களின் தாராள இறக்குமதி உள்நாட்டு உற்பத்தியை சீர்குலைத்து வாழ்க்கைச்செலவை மேலும் மேலும் அதிகரிக்கச் செய்துவருகிறது.

ஆகவே நாட்டில் நேர்மையாக உழைத்துவாழ முடியாத மக்கள் லஞ்சம் ஊழல் மோசடிக்கு இரையாகிறார்கள். கடத்தல் தொழில் சாதாரண அபின் கஞ்சாவிலிருந்து இன்று ஹெரோயின் போதைப்பொருள் ஆயுதக் கடத்தல்வரை முன்னேறிவிட்டது. தேவையற்ற யுத்தம் ஒன்று வட-கிழக்கு மக்கள் மேல் திணிக்கப்பட்டுள்ளதால் வட-கிழக்கு மக்கள் ஜனநாயக சுதந்திரம் அத்தனையும் இழந்து அகதிகளாக்கப்பட்டு அல்லல்பட நேர்ந்துள்ளது. இதனால் யுத்தத்தில் அநியாய உயிரிழப்புக்களும் பெரும் பொருள் இழப்புக்களும் ஏற்படுவதுடன் அதன்பழுவை மக்கள்தான் சுமக்கவேண்டியுள்ளது. இதுபோதாதென்று யுத்தத்திற்கான வரி வேறுமக்கள் செலுத்தும் நிலை உருவாகிவிட்டது. வடபகுதி மக்கள் பொருளாதார தடைக்கு மட்டுமல்ல,மின்சார எரிபொருள்தடை, உரத்தடைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். இதனால் உற்பத்தியில் ஈடுபடும் தனிமனித சுதந்திரம் மறுக்கப்பட்டு விட்டது. கிழக்கிலங்கையில் பரம்பரை படுகொலைகள் தொடர்கதையாக நீண்டு வருகிறது. இவ்வளவு கஷ்டங்களின் மத்தியிலும் உற்பத்திசெய்த நெற்சூடுகள் எரியூட்டப் படுகிறது. வயலில் வேலைசெய்தவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். மனிதப் படுகொலைகள், காணாமல் போதல் முழுநாட்டிலும் சர்வசாதாரணமாகி விட்டது.

இந்த நிலையில் தான் சர்வதேச தொழிலாளர் தினமான மேதினத்தை நாம் கொண்டாட இருக்கிறோம். "உழவத் தொழிலாளர்களே ஒன்றுபடுவீர்" என்ற உன்னத போராட்ட பதாகை முதாலாளித்துவ மேலாதிக்கவாதிகளால் சிதைக்கப்பட்டு விட்டது. முதலாவது தொழிலாளி வர்க்க அரசு என்று சொல்லப் பட்ட சோவியத் அரசு இருந்த இடம் தெரியாமல் இல்லாமல் ஆக்கப்பட்டு விட்டது. ஏகாதிபத்திய வாதிகளின் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு இந்தநாடு இரையாகிவிட்டது. இதற்கு காரணகர்த்தாக்களான முதாலாளித்துவ பாதையாளர்கள் தமக்குள்தாமே அதிகாரத்துக்காக இன்று மல்லுக்கட்டி நிற்கிறார்கள். ஜனநாயகம் வாழ்வதாக கூறும் ஐரோப்பாவில் மீண்டும் நாஸிசம் நவீனமுறையில் உருவாகி வருகிறது. அதற்கு அந்த நாடுகளுக்குச் சென்ற அரசியல் அகதிகளும் பொருளாதார பரதேசிகளும் இலக்காகி வருகிறார்கள்.

> தொழிலாளிவர்க்கம் மீண்டும் தொழிலாளவர்க்க அரசியலை முதன்மைப்படுத்தி முதலாளித்துவபாதையை நிராகரிக்க வேண்டும். முழுநாட்டு மக்களுக்கும் அச்சுறுத்தலாக உள்ள தனிநபர் சர்வாதிகாரத்துக்கு இட்டுச் செல்லும் இந்த இனவிரோத மதவாத அரசியலமைப்பை, மாற்றி பல்லினமக்கள் வாழம் நாட்டுக்கேற்ற ஜனநாயக அரசியல்அமைப்பை மனிதஉரிமைகள், ஜனநாயக சுதந்திரங்களை உத்தரவாதப்படுத்தும் புதிய அரசியல் யாப்பை உருவாக்க தொழிலாளிவர்க்கம் முன்முயற்சியை மக்கள்மத்தியில் எடுத்துச் செல்லவேண்டும்.

அனைவருக்கும் எட்டுமணி நேரவேலை என்று உரிமைமுழக்கம் செய்த சிக்காகோ தொழிலாளர் பேரணியாளும் அதிகார வர்க்கத்தின் துப்பாக்கிக்கு இரையாகி உயிர் தியாகம் செய்து உதிரம் சிந்தியதில் பிறந்த தினம் மேதினம். இத்தினத்தை சர்வதேச தொழிலாளர் தினமாக கொண்டாட அறைகூவல்விட்டது முதலாவது தொழிலாளி வர்க்க அகிலம். அதை ஏற்று அன்றிலிருந்து இன்று வரை அனைத்து நாடுகளிலும் தொழிலாளி வர்க்கம் தனது போராட்ட தினமாக இதைக் கொண்டாடிவருகிறது. இந்த மேதினம் பல நாடுகளில் விடுமுறை தினமாக நடைமுறைக்கு வந்துள்ளது. அந்தவகையில் எமது நாடும் மேதினத்தை விடுமுறை தினமாக பெற்றெடுத்துள்ளது. இலங்கைத் தொழிலாளிவர்க்கம் நடத்திய பலவர்க்கப் போராட்டங்களில் பல தொழிலாளர்கள் உயிர்த்தியாகம் செய்துள்ளார்கள். பலர் சிறைசென்றுள்ளார்கள். பலர் நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப் பட்டார்கள். ஆயினும் அவர்களின் போராட்ட தியாகம் இந்த நாட்டுத் தொழிலாளிவர்க்கத்துக்கும் உழைக்கும்மக்களுக்கும் எண்ணற்ற உரிமைகளை வென்றெடுத்துக் கொடுத்துள்ளது. இன்று எட்டுமணி நேரவேலை அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொண்ட ஒரு நடைமுறையாகி வருகிறது. சிக்காகோ போராட்டத்தில் சிந்திய இரத்தத்தில் சிவந்த செங்கொடி இன்று உலகளாவிய முறையில் பறப்பதில் எவரும் ஆச்சரியப் படுவதற்கு எதுவுமில்லை.

சர்வதேச தொழிலாளர் தினமான மேதினம் வர்க்கப் போராட்டத்தில் பிறந்தது வர்க்கப் போராட்டத்தில் வளர்ந்தது. மு-

லாளித்துவ களியாட்டவிழாக்களால் இது மழுங்கடிக்கப் பட்டபோதும் திசை திருப்பப் பட்டபோதும் இன்னும் உயிர்வாழ்ந்து வருகிறது. எமதுநாட்டில் 1953 ஆகஸ்ட் ஹர்த்தால் வரை வர்க்கப் போராட்டம் உத்வேகம் அடைந்து வந்ததை அனைவரும் அறிவர். 1947 பொதுவேலை நிறுத்தம் இந்தநாடு சுதந்திரம் அடைவதற்கும் ஒரு காரணியாக இருந்தது என்பதை பலரும் வசதிக்காக இதைமறந்து விட்டார்கள். புத்திசாலிகளான பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் இரண்டாவது உலகயுத்தத்தின் பெறுபேறாக காலனி நாடுகள் சுதந்திரநாடுகளான மாறுவதைத் தவிர்க்க முடியாது என்று உணர்ந்ததாலும், இந்திய சுதந்திர போராட்டத்தின் விச்சாலும் இலங்கையின் 1947 பொது வேலைநிறுத்தம் ஏற்படுத்திய திகிலாலும் ஆபத்தில்லாத தங்கள் சகாக்களுக்கு அதிகாரத்தைக் கைமாற்றியதே இலங்கை சுதந்திரமாகும். இந்த சுதந்திரப் பாதையில் யூதேசிகளுக்கு சமிக்கைகாட்டிய 1953 வரவு செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்தவர் முன்னாள் நிதி அமைச்சரும் பின்னாள் ஜனாதிபதியுமான ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆகும். அதற்கு எதிராக கிளர்ந்தெழுந்ததே ஹர்த்தால். இந்த ஹர்த்தால் தெற்கிலிருந்து வடக்குவரை, கிழக்கிலிருந்து மேற்குவரை முழுநாட்டையும் ஸ்தம்பிக்கச் செய்த பெரும் மக்கள் போராட்டமாகும்.

இந்தப் போராட்டம் அனைத்து உழைக்கும் மக்களும் தனது உழைப்பை நிறுத்தி, அனைத்து போக்குவரத்தும் இயங்கமுடியாமற் செய்து முழுநாட்டிலும் கதவடைப்புச் செய்து, மந்திரிசபைகூட இலங்கை மண்ணில் கூடமுடியாமல் துறைமுகத்தில் நங்கூரம் பாச்சிய ஒரு அந்நிய நாட்டுக் கப்பலில் கூடவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது. அன்று பிற்பகல் பிறப்பிக்கப்பட்ட அவசரகால நிலையின் கீழ் பல உயிர்களைப் பலியெடுத்த ஆட்சியாளர்களின் அடக்குமுறை இயந்திரம் தீவிரமாக செயற்பட்ட போதும் அன்றைய பிரதமர் டட்லி சேனநாயக்க பதவிவிலகவேண்டி ஏற்பட்டது.

இந்த ஹர்த்தாள் போராட்டத்தின் உத்வேகத்தை சரியாக கணிக்க முடியாத இடதுசாரித் தலைவர்களது கையாலாகாத்தனமும் மலையகத் தோட்டப் பாட்டாளிகள் அதன் முதலாளித்துவ தலைமையால் போராட்டத்தில் பங்கெடுக்காத வாறு தடுக்கப்பட்ட துரோகமும், மக்களின் புரட்சிகரஉணர்வை சரியான பாதையில் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லமுடியாமல் செய்துவிட்டன. இந்த சக்திமிக்க மக்கள் போராட்டச் சுவாலையை தனது பாதையில் சரியாகப் பயன்படுத்திய எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க ஆவார். இதன் பின்னால்தான் இந்தநாட்டின் வர்க்கப் போராட்டம் சீர்குலையவும் இனக்குரோத அரசியல் தலைதூக்கவும் இது ஒரு வாய்ப்பாக அமைந்து விட்டது.

மேலாய மேதனமும முதலாளித்துவ கட்சிகளின் கேளிக்கைத் தினமாக மாற்றப்பட்டு விட்டது. இன்று இந்தியக் கலைஞர்களதும், சினக்கலைஞர்களதும் களியாட்ட தினமாக மேதினத்தை ஆளும்கட்சிகள் கொண்டாடுகின்றன. உண்மையில் இது இந்த நாட்டின் தொழிலாளி வர்க்கத்துக்கு பெரும் சாபக்கேடாகும். வர்க்க உணர்வை மழுங்கடிப்பதிலும் மேதினத்தின் போர்க்குணத்தை இல்லாமல் செய்வதிலும் இந்த ஆளும் கட்சிகளின் தமாசாக்கள் இந்த நாட்டில் மனிதஉரிமைகள் ஜனநாயக சுதந்திரங்கள் மறுக்கப்படுவதை மறைப்பதற்கு திரையாக பயன்படுத்தப் படுகிறது.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் ஆட்சியின்கீழ் பின்பற்றப்படும் தேசவிரோத நவ்பேனும் இந்த பொருளாதார மாற்றம் 1953 ஹர்த்தாலின் போது முழு நாட்டு மக்களின் எதிர்ப்பின் மூலம் சகல இனங்களையும் சேர்ந்தவர்களாலும் நிராகரிக்கப் பட்ட ஒன்று என்பதை இந்த மேதினத்தில் அனைத்து தொழிலாளி வர்க்கத்திற்கும் உழைக்கும் மக்களுக்கும் நாம் மீள நினைவுபடுத்த வேண்டியது அவசியம்.

சிங்களம் மட்டும் அரசாங்க மொழியாக்கப் பட்டதுடன் ஆரம்பமாகி பண்டா-செல்வா ஒப்பந்தத்தை நிராகரித்து இந்த நாட்டில் ஆதிக்க சக்திகளால் உருவாக்கப்பட்ட தொடர்ச்சியான இனக்கலவர பாதைதான் இனங்கள் மத்தியிலிருந்து வந்த பரம்பரம் புரிந்துணர்வை இல்லாமல்செய்து, தனிநாடுகாண் படைத்தவிர - பேச்சுவார்த்தைகள் மூலமோ ஒப்பந்தங்கள் மூலமோ தமிழினம் தமது உரிமைகளைப் பெறமுடியாது என்ற நிலைக்கு தமிழ் பேசும்மக்களை விரட்டியடித்தது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தேசிய இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வின் மூலம் எந்தப் பரிகாரத்தையும் காண முடியாது அழிவைத்தவிர என்பது கடந்தகால அனுபவங்கள் எமக்கு எடுத்துக் காட்டுகிறது. ஆகவே அரசியல் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு ஒன்றே ஒரே வழி என்பதை இந்த மேதினத்தில் நாம் வலியுறுத்த வேண்டும். இனப்பிரச்சனைக்கு நீதியான தீர்வு ஒன்றைக் காண்பதன்மூலம் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் மூலம் மட்டுமே மீண்டும் நாம் வர்க்கப் போராட்ட அரசியலை இந்தநாட்டில் உயர்த்திப்பிடிக்க முடியும். இதற்காக இந்த மே தினத்தில். தொழிலாளி வர்க்கம் உறுதி பூணவேண்டும்.

தொழிலாளி வர்க்கம் மீண்டும்தொழிலாளி வர்க்க அரசியலை முதன்மைப்படுத்தி முதலாளித்துவ பாதையை நிராகரிக்க வேண்டும். முழு நாட்டு மக்களுக்கும் அச்சுறுத்தலாக உள்ள தனிநபர் சர்வாதிகாரத்துக்கு இட்டுச் செல்லும் இந்த இனவிரோத மதவாத அரசியலமைப்பை மாற்றி பல்லின மக்கள் வாழும் நாட்டுக்கேற்ற ஜனநாயக அரசியல் அமைப்பை மனிதஉரிமைகள் ஜனநாயக சுதந்திரங்களை உத்தரவாதப்படுத்தும் புதிய அரசியல் யாப்பை உருவாக்க தொழிலாளி வர்க்கம் முன்முயற்சியை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டும்.

இன்றைய உலக முதலாளித்துவ மேலாதிக்கத்துக்கு சேவைசெய்யும் பொருளாதார மார்க்கத்தை நிராகரித்து இந்த நாட்டுமக்களுக்கு சேவை செய்யும் சுதந்திர ஜனநாயக பொருளாதார மாற்றத்தை உருவாக்க தொழிலாளிவர்க்கம் இந்த மேதினத்தில் முழுநாட்டு மக்களுக்கும் அறைகூவல் விடுக்க வேண்டும். நாட்டின் விலைவாசி உயர்வு வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகியவற்றிற்கு ஏற்ற ஊதிய உயர்வு பெற அனைத்து தொழிலாளர்களும் ஒன்றுபட வேண்டும்.

உலகத் தொழிலாளர்களே ஒடுக்கப்பட்ட மக்களே ஒன்றுபடுவீர் என்ற உன்னதமார்க்கத்தை முன்னெடுத்துச்செல்ல இந்த மேதினத்தில் நாம் அனைவரும் சபதம் ஏற்போமாக.

படிப்பகம்

www.padippakam.com



# அம்பலமாகும் சர்வதேச புலிப்பயங்கரவாதம்..

ஆயுதத்தை மட்டும் நம்பிய அரசியல் சாணக்கியமற்ற, தான்தோன்றித் தனமான நடவடிக்கைகளால் கிழக்கை அரசின் கட்டுப்பாட்டில் விட்டுவிட்டு ஓடிவந்தபுலிகள் வடக்கின் பலபகுதிகளை இழந்து நிற்பதோடு குடாநாட்டின் பெரும் பகுதியையும் இழந்து வருகிறார்கள்.

வடக்கு கிழக்கில் தமிழ்பேசும் மக்களை வரிகளின் பெயரால் சுரண்டியும், சித்திரவதைக் கூடங்களில் இம்சித்தும் வரும் பாசிசப் பயங்கரவாதிகளானபுலிகள் சர்வதேசமெங்கும் விரித்துள்ள பயங்கரவாதநடவடிக்கைகளால் அம்பலப்பட்டுப் போயுள்ளனர்.

## இந்தியாவில் புலிகள் தடை

இந்தியாவில் புலிகள் பயங்கரவாதஇயக்கம் என குற்றம்சாட்டப்பட்டு இயங்குவதற்கு தடைசெய்யப்பட்டுள்ளது. இவர்களுக்கு ஆதரவுதெரிவிப்பவர்களோ, உதவுபவர்களோ குற்றவாளிகளாவர். இவர்கள்தண்டனைக்குள்ளாக்கப்படுவர் எனதெரிவிக்கப்பட்டுள்ளது

ராஜீவ்காந்தியின் கொலையில் குற்றவாளிகளாக பிரபாகரனும், பொட்டம்மானும் காணப்பட்டுள்ளனர். ஒப்பந்தத்தின்போது பிரபாகரன் டெல்லியில் தங்கியிருந்தபோது சென்னையிலிருந்த பாலசிங்கத்துடன் தொலைபேசியில் கதைத்தபோது ராஜீவுக்கு பாடம்படிப்பிப்பேன் என்றுகுறிப்பிட்டது பொலிசாரால் பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஆகவே திட்டமிட்ட பழிவாங்கல் நடவடிக்கையே ராஜீவ் கொலையென தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பிரிவினைவாதத்தை ஏற்படுத்த முனைந்தது முதல் ராஜீவ் படுகொலை, பத்மநாபா படுகொலை, மற்றும் புலிகள் இந்தியாவில் மேற்கொண்ட ஏராளமான பயங்கரவாத நடவடிக்கைகளையும் விபரித்து ஆயிரத்துக்கும் அதிகமான பக்கங்களில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் ஒழிக்கப்படவேண்டும் என்பதை அங்கீகரிக்கும், நடைமுறைப்படுத்தும் சர்வதேசநாடுகள் பல இந்தியாவின் இத்தடையை தொடர்ந்து தமது நாடுகளில் புலிகள் தொடர்பாக உஷார் அடைந்துள்ளன. இந்தியாவின் புலிகள்மீதான இத்தடையானது தேங்கிப்போயுள்ள தமிழ்பேசும்மக்களின் விடுதலைப் போராட்டத்தில் பல விளைவுகளை ஏற்படுத்தும்.

## நோர்வேயில் கப்பம் வாங்கும் புலி

நோர்வேயில் வசிக்கும் 5500 தமிழ்பேசும் மக்களிடம் புலிகள் மிரட்டியும், பயமுறுத்தியும் கப்பமாக பணம்பெற்றுவந்துள்ளனர். பணம்கொடுக்க மறுப்பவர்களுக்கு கொலை பயமுறுத்தல்களும் புலிகளால் நடத்தப்பட்டுள்ளன.
இதுபற்றி நோர்வேயில் அதிகம் விற்பனையாகும் நாளேடான 'உலகவலம்' என்னும் பத்திரிகை பல திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டுள்ளது.

நோர்வேயிலுள்ள ஒஸ்லோ நகரப் பொலிசார் நோர்வே புலிகளின் பொறுப்பாளர் ராஜனின் வீட்டை திடீர் சோதனைக்குட்படுத்தியுள்ளனர். ராஜனின் உறவினர் ஒருவரை பொய்யான விபரங்களுடன் ஒளித்துவைத்திருந்துள்ளார் என்பதை பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

ராஜகுலசிங்கம் செல்லையா என்னும் ராஜன் பொலிசில் மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றியதால் தமிழ்பேசும்மக்கள் தொடர்பாக அனைத்து விபரங்களையும் சேகரித்துவைத்துக்கொண்டு அவர்களை மிரட்டிவந்துள்ளார் என்பது பொலிசாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இவர் ஒருமாணவன் என்ற போர்வையிலேயே நோர்வேயில் தங்கியுள்ளார்.

புலிகளின் காட்டுதர்பார் பற்றி பொலிசில் முறைப்பாடு செய்துள்ள 17தமிழர்களை உலகவலம் பேட்டிகண்டபோது அநேகர் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தமது குடும்பங்கள் புலிகளால் பழிவாங்கப்படும் என்பதனால் புகைப்படங்களையும் பெயர் விபரங்களையும் உலகவலம் பத்திரிகையில் வெளியிட மறுத்துவிட்டனர். இவர்களின் பொலிசிலான முறைப்பாடுகளை தொடர்ந்து புலிகளுக்கு எதிரான பயங்கரவாத குற்றப்பத்திரிகை ஒன்று பொலிசில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.
பொலிசில் முதலில் முறைப்பாடு செய்துள்ளதோடு, உலகவலம் பத்திரிகைக்கும் புலிகள் தொடர்பான பயங்கரவாத விபரங்களை துணிந்து கூறியவர்கள் ஆறுமுகம் ஜெயகாந்தன், கலிஸ்டன் இராசநாயகம் ஆகிய இருவரும் இத்துணிகர செயலைமேற்கொண்டுள்ளனர். புலிகள் 'மாபியா' பாணியில் தமது இயக்கத்தை நோர்வேயில் வளர்த்துக் கொண்டுள்ளனர். இலங்கையில் இலங்கை இராணுவம் கொன்ற தமிழர்களை விட புலிகளால் கொலைசெய்யப்பட்ட தமிழர்களே அதிகம். இவர்களை நோர்வேயில் இப்படியே விட்டால் இங்கும் கொலைவெறியை ஆரம்பிப்பார்கள் என நாம் சந்தேகமில்லாமல் கூறுகிறோம். என இவ்விருவரும் தெரிவித்துள்ளனர் என உலகவலம் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

## மே தினத்தில் புலிகள் கைது

நோர்வேயில் இடம்பெற்ற மேதினஊர்வலத்தில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகித்த இளைஞர்களை புலிகள்மிரட்டினர். இதனை சிவிலுடையில் அவதானித்துக்கொண்டிருந்த பொலிசார் இருபுலி உறுப்பினர்களை கைதுசெய்துள்ளனர்.

## சுவடுகள் ஆசிரியர் தாக்கப்பட்டார்

இம் மேதினஊர்வலத்தில் புலிகள் விற்பனைசெய்த சின்னம்ஒன்றை வாங்கமறுத்த 'சுவடுகள்' சஞ்சிகை ஆசிரியர் அமிர்தலிங்கம் மறைவிடக்கூட்டிச்செல்லப்பட்டு புலிகளால் தாக்கப்பட்டார். இவர் வீட்டிற்குசென்றபின்பு இவரின்வீட்டைத்தாக்க புலிகள்முயன்றுள்ளனர். பொலிசின் உதவிகோரப்பட்டதால் புலிகள் பின்வாங்கி தலைமறைவாகினர்.

புலிகளின் பாசிசநடவடிக்கைகள் தொடர்பாக ஏனையோர் பொலிசில் முறைப்பாடு செய்தபோது இவர்களில்சிலர் சுவடுகள் சஞ்சிகையாளரை அணுகி பொலிசில்முறைப்பாடு செய்யுமாறு வேண்டியபோது இவர்கள் மறுத்துவிட்டனர். இப்போது இவர்கள் தமக்கு அடிவிழுந்தபின்பு பொலிசில் முறைப்பாடு செய்துள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதுவரை 35பேர்வரையில் புலிகளின் பயங்கரவாதத்திலிருந்து தம்மை காப்பாற்றுமாறு பொலிசில் புகார் செய்துள்ளனர்.

## சுவிச்சலாந்தில் மேதினத்தில் புலிகள் கலாட்டா

இம்முறை சுவிஸ்சில் இடம்பெற்ற மேதின ஊர்வலத்தில் ஊர்வலமாகச் சென்ற தமிழ் இளைஞர்கள்மீது புலிகள் தாக்கியுள்ளனர்.

தமிழீழ விடுதலைக்கழகம் (PLOT) ஒழுங்குசெய்திருந்த மேதின ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கான புலி தவிர்ந்த இளைஞர்கள் கலந்துகொண்டனர். கடந்தவருடம் இவர்களின் ஊர்வலத்தில் திடீர் தாக்குதல் நடாத்திய போன்று இம்முறையும் புலிகள் இவ்விளைஞர்கள் மீது தாக்கியுள்ளனர். ஆனால் இம்முறை இளைஞர்கள் புலிகள்மீது திருப்பித் தாக்கியுள்ளனர். இதனால் பலருக்கு இருதரப்பிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

## நாடு கடத்தல்

சுவிசிலிருந்து சிலமாதங்களுக்கு முன்பு பயங்கரவாதியென புலிஉறுப்பினர் ஒருவர் ஸ்ரீலங்காவுக்கு நாடுகடத்தப்பட்டுள்ளார். சூரிச்மாவட்டத்தில் புலிகளின்நிதிப்பொறுப்பாளராக இருந்த பிராயன் என்று அழைக்கப்படும் கரவெட்டியை சேர்ந்த இப்புலி உறுப்பினரே நாடுகடத்தப்பட்டவராவர். சுவிஸ் பொலிசார் புலிகளின் நடவடிக்கைகளை மிகஅவதானமாக அணுகிவருகின்றனர் என்பதையே இது காட்டுகிறது.


## கனடாவில் கொலை முயற்சி

கனடாவில் இயங்கிவரும் 'சங்கமம்' வானொலி தமிழ்நிகழ்ச்சி தயாரிப்பாளரான இளையபாரதி மீது புலிகள் துப்பாக்கிபிரயோகம் செய்துள்ளனர். அவர் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார். இதுதொடர்பாக இளையபாரதி பொலிசில் முறைப்பாடு செய்ததை தொடர்ந்து பொலிசார் புலன்விசாரணையை மேற்கொண்டுவருகின்றனர். உலகத்தமிழர் இயக்கம் என்றபெயரில் கனடாவில் இயங்கிவரும் புலிகளே இளையபாரதியை கொலைசெய்ய முயற்சிசெய்துள்ளனர். இவர்களில் அசோகன், பரமநாதன் ஆகிய இருவரும் இளையபாரதியால் அடையாளம் காணப்பட்டு இவர்கள்பற்றிய விபரங்கள் பொலிசில் இளையபாரதியால் கொடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 2ம் பக்கம்பார்க்க

ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம்.

EELAM PEOPLES INFORMATION CENTRE



POST BAG - 5551
MADRAS - 600094
INDIA.

B.M. BOX - 1738
LONDON-WCIN-3XX
U. K.

POST FACH - 100206
4600 DORTMUND - 1
GERMANY.

P. BOX 6800
AGINCOURT
ONTARIO M1S3C6
CANADA.

BOITE NO - 69
7 - RUE RACINE
95140 - GARGES
FRANCE.

POST BOKS - 115
GROURD HAGENEN
0905 - OSLO - 9
NORWAY.

POST BOX - 52
LAVERTON
VICTORIA - 3028
AUSTRALIA.

ஈழமக்கள்புரட்சிகரவிடுதலைமுன்னணியின் பிரச்சாரப்பிரிவான ஈழமக்கள்செய்திதொடர்புநிலையத்தின் ஐரோப்பியப்பிரிவினால் புதியபார்வை வெளியிடப்படுகிறது.